சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் சட்டமன்றத் தொகுதி கலந்தாலோசனைக் கூட்டம் மாவட்ட கழக செயலாளர்,இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் பகுதிச் செயலாளர்கள் சொ.வேலு,வி.சுதாகர் முன்னிலையில் தொகுதி பொறுப்பாளர் பி.எம்.யாழினி ஆலோசனையில் நடைபெற்றது. கூட்டத்தில் தமிழன் பிரசன்னா தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே. எஸ்.எம்.நாதன்,மாவட்ட துணை செயலாளர் புனிதவதி எத்திராசன், பொதுக்குழு உறுப்பினர்கள் கோ.மணி, அ.நிர்மலா தேவி,பரிதி இளம்சுருதி,ராஜேஸ்வரி ஸ்ரீதர்,ஜி.தாமோதரன் மற்றும் எழும்பூர் வடக்கு,தெற்கு பகுதிக்குட்பட்ட மாநில,மாவட்ட,பகுதி, வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அணிகளின் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், பகமுகவர்கள், பிஎல்சி உறுப்பினர்கள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்துகொண்டனர்.

துணை முதலமைச்சரும், மாநில இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞரணி சார்பில் குதிரை ரேக்ளா பந்தயம், மகளிர்களுக்கான கபடி போட்டி மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வி.ஜெ.உமாமகேஸ்வரன் ஏற்பாட்டில் புல்லரம்பாக்கத்தில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ரேக்ளா பந்தயம் மற்றும் கபடி போட்டியை தொடங்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர் புஜ்ஜி டி.ராமகிருஷ்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜே.ரமேஷ், மாநில இளைஞரணி துணை செயலாளர் பிரபுகஜேந்திரன், மாவட்ட நிர்வாகிகள் எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதரன், ஜி.விமல் வர்ஷன், சங்கீதாசீனிவாசன், வழக்கறிஞர் வி.வினோத், வி.தியாகராஜன், குதிரைகள் உரிமையாளர்கள் மாவட்ட சங்கத் தலைவர் பி.நந்தகுமார், பி.கே.இ.கபிலன், மா.தமிழ்வாணன், ஆர்.கிரண்குமார், மனோகரன், விமலா குமார், டி.தென்னவன், கே.முகமது ரஃபி, சிற்றரசு, டி.முரளிகிருஷ்ணன், கே.சரவணன், வி.எஸ்.சதீஷ்குமார், சந்தோஷ், முனுசாமி, மதியழகன், குமார், சுமன், ராஜ்மோகன், ராஜாராம், இளையராஜா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமை! ஓ.ஏ.நாகலிங்கம் ஆலோசனை வழங்குகிறார்!

வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக் கழக கலந்தாலோசனைக் கூட்டம்!

தயாநிதி மாறன் - அ.வெற்றிஅழகன் பங்கேற்பு! கூ.பீ.ஜெயின் - வே.வாசு அறிக்கை!

சென்னை, நவ. 4

வில்லிவாக்கம் மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் கூ.பீ.ஜெயின் எம்.சி. மற்றும் வில்லிவாக்கம் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் வே.வாசு ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கலந்தாலோசனைக் கூட்டம் நாளை (5.11.2024 செவ்வாய்க்கிழமை) காலை 9.00 மணிக்கு, வில்லி வாக்கம், எம்.டி.எச்.சாலையில் அமைந்துள்ள டி.கே.ஏ. திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமை வகிக்கிறார்.

இக்கூட்டத்திற்கு மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ. வெற்றியழகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்திற்கு வில்லிவாக்கம் தொகுதிப் பார்வையாளர் ஓ.ஏ.நாகலிங்கம் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகின்றார்.

எனவே இக்கூட்டத்திற்கு சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறோம்.

இவ்வாறு வில்லிவாக்கம் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் கூ.பீ.ஜெயின் எம்.சி. மற்றும் வில்லிவாக்கம் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் வே.வாசு ஆகியோர் அறிவிப்பில் தெரிவித்துள்ளனர்.

துறைமுகம் சட்டமன்றத் தொகுதி கலந்தாலோசனைக் கூட்டம்!

மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு - தொகுதி பொறுப்பாளர் நரேந்திரன் சிறப்புரையாற்றினர்!

சென்னை, நவ.4-

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் கிழக்கு மேற்கு பகுதி கழகச் செயலாளர்கள் எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர் ஆகியோர் முன்னிலையில் நேற்று (03.11.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில், சென்னை.1, 117, ஏழுகிணறு தெரு, குளோப் திருமண மண்டபத்தில் நடைபெற்ற கலந்தாலோசனைக் கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர், இந்து சமயம் மற்றும் அறநிலைத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு மற்றும் தொகுதி பொறுப்பாளர் இரா. நரேந்திரன் சிறப்புரையாற்றினர்.

எம்.விஜயகுமார், ஜி.எம். தேவன், இசட்.ஆசாத், என்.பி.எம். ஷேக் அப்துல்லா, பி.ஸ்ரீராமுலு, ராஜேஷ் ஜெயின், பி.பரிமளம், எல். சம்பத்குமார், கே.விநாயகம், பி.விஜயகுமார், பா.பிரதீப் குமார், ஆர்.கலைச் செல்வி, எம்.இ.கனி, பா. ஜெகதீஷ், கே.ஆர்.அபரஞ்சி, மே.ஜனார்த்தனன், மா.முத்துக்குமார், ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, சே. தமிழ்வாணன், வெ. சந்தானலட்சுமி, சி.ப.ஜெயராமன், எம்.ஜெய்சங்கர், ஆர் ரவிச்சந்திரன், பா.கதிரவன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதீஷ்குமார், வே.பா.பிரபாகரன், எல். சத்யநாராயணன், எஸ். புகழேந்தி, ஆர்.எ. அஸ்லாம், டி. கதிரவன் (எ) ராஜா, கே. கவியரசு, ஆ.நா. பார்த்திபன் மற்றும் துறைமுகம் கிழக்கு மேற்கு பகுதிக்குட்பட்ட மாநில மாவட்ட பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் அணிகளின் நிர்வாகிகள் செயற்குழு உறுப்பினர்கள், பாக முகவர்கள், பி.எல்.சி. உறுப்பினர்கள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் - சைதை தேரடி திடலில்

கழக அரசின் சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம்!

பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி வேண்டுகோள்!

சென்னை, நவ.4

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் சைதை தேரடி திடலில் நடைபெறவுள்ள கழக அரசின் சாதனைகளை எடுத்துரைத்து நடைபெறும் பொதுக்கூட்டத்திற்கு சைதை மேற்கு பகுதிக்குட்பட்ட ஆறு வட்டங்களை சார்ந்த கழக தோழர்கள் பெருதிரளாக பங்கேற்பீர் என பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சைதை மேற்குப் பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலக் குழுத் தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

சென்னை தெற்கு மாவட்டம் - சைதை மேற்கு பகுதியில், சென்னை தெற்கு மாவட்டம் திமுக சார்பில் உழைப்பின் உவமை உதயநிதியால் கண்டறியப்பட்ட கழகக் களப்போரில் துணை நிற்கும் கருத்தியல் சொற்போர் வீரர்கள் பங்கேற்கும் மாபெரும் பொதுக்கூட்டம் சைதாப்பேட்டை காரணீஸ்வரர் கோயில் தெருவில் உள்ள தேரடி திடலில் இன்று (04.11.2024 திங்கட்கிழமை) மாலை 5 மணியளவில் கழக அரசின் சாதனைகளை எடுத்துரைத்து தனித்துவம் படைக்கும் இளைஞர் நலன் என்ற தலைப்பில் நாமக்கல் மோகநிதியும், மகத்துவம் படைக்கும் மருத்துவத்துறை என்ற தலைப்பில் செங்கல்பட்டு சிவரஞ்சினியும், சாதனைப் படைக்கும் கல்வித்துறை என்ற தலைப்பில் தஞ்சை ஜோ.வியானி விஸ்வாவும், சரித்திரம் படைக்கும் சமூக நலன் என்ற தலைப்பில் விருகை சந்தோஷ் ஜெய்யும் ஆகியோர் சொற்பொழிவு ஆற்றுகின்றனர்.

எனவே நம்முடைய சைதை மேற்கு பகுதிக்குட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக்கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் அனைத்து அணிகளை சார்ந்த மாவட்ட துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், பகுதி பிரதிநிதிகள், வட்ட செயற்குழு உறுப்பினர்கள், பாகப் பொறுப்பாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், பாக களப்பணியாளர்கள், கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள், பகுதி பெருதிரளாக பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு எம்.கிருஷ்ண மூர்த்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

மாதவரம் எஸ்.சுதர்சனம் - கே.பி.சங்கர் - கலாநிதி வீராசாமி - ஆரம்பாக்கம் ஆறுமுகம் பங்கேற்பு!

திருவொற்றியூர் கிழக்குப் பகுதி பாக முகவர்கள் - கழக நிர்வாகிகள் கூட்டம்!

பகுதிக் கழகச் செயலாளர் - மண்டலத் தலைவர் தி.மு.தனியரசு அறிக்கை!

சென்னை, நவ.4-

திருவொற்றியூர் கிழக்குப் பகுதிச் செயலாளர் 1-வது மண்டலக் குழு தலைவர் தி.மு.தனியரசுவின் அறிக்கை வருமாறு:-

திருவொற்றியூர் கிழக்குப் பகுதி பாக முகவர்கள், கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் 5.11.2024 மற்றும் 7.11.2024 ஆகிய தேதிகளில் திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1-வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு தலைமையில் நடைபெறுகிறது.

வட்ட செயலாளர்கள் த.கார்த்திகேயன், டி.சி.வி. மணிகண்டன், எம்.எல்.சரவணன், எஸ்.தமிழ்செல்வன், குறுத்து சி.முனுசாமி, க.வீ.சதிஸ்குமார், கேபிள் டிவி எம்.ராஜா, ஆர்.சந்தர், கா.கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கீழ்குறிப்பிட்டுள்ள தேதியில் நடைபெற உள்ள கூட்ட விவரம் வருமாறு:-

வார்டு 7 - 5.11.2024 செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு ராமகிருஷ்ணா நகரில் அமைந்துள்ள சமுதாய கூடம்.

5.11.2024 - வார்டு 8 மாலை 5 மணிக்கு எகவள்ளியம்மன் கோயில் தெருவில் அமைந்துள்ள வட்ட செயலாளர் அலுவலகம்.

5.11.2024 - மாலை 6 மணி வார்டு 9 மாவட்ட அவைத்தலைவர் அலுவலகம்

5.11.2024 - மாலை 7 மணி வார்டு 10 சன்னதி தெரு அமைந்துள்ள பகுதி கழக அலுவலகம்.

வார்டு 14 அ - மாலை 7.30 மணி பீச் ரோட்டில் தாங்கல் அமைந்துள்ள வட்ட செயலாளர் அலுவலகம்.

7.11.2024 - வார்டு 11 வியாழக்கிழமை மாலை 5 மணி டி.எச்.ரோட்டில் அமைந்துள்ள வட்ட செயலாளர் அலுவலகம்.

7.11.2024 - மாலை 6 மணி மேற்கு மாடவீதியில் அமைந்துள்ள மாமன்ற உறுப்பினர் அலுவலகம்.

7.11.2024 - வார்டு 13 மாலை 7 மணிக்கு மேட்டு தெருவில் அமைந்துள்ள G.R.T.மஹாலில்.

7.11.2024 - வார்டு 14 பீச் ரோட்டில் அமைந்துள்ள மாமன்ற உறுப்பினர் அலுவலகம்.

இதில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர் ஆரம்பாக்கம் ஏ.ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

ஆகையால் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பகுதி அணியின் நிர்வாகிகள், பாக முகவர்கள், கழக மூன்னோடிகள் கலந்து கொள்ளும் படி கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிக் கழகச் செயலாளர் - 1-வது மண்டலக் குழுத் தலைவர் தி.மு. தனியரசு அறிவித்துள்ளார்.

தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க

சட்டமன்றத் தொகுதிப் பார்வையாளர்கள் அறிமுகக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி, நவ. 4 -

தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தருமபுரி மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பாலக்கோடு, அரூர், பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதிகளுக்கான பார்வையாளர்கள் அறிமுகக் கூட்டம் இன்று (04.11.2024 -திங்கட்கிழமை) காலை 9.30 மணியளவில் காரிமங்கலம் மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழகத் அவைதலைவர் திரு. கே.மனோகரன்,Ex.,MLA தலைமையில், மாவட்ட கழக துணை செயலாளர் வழக்கறிஞர்.ஆ.மணி.,எம்.பி முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில விவசாய அணி துணை செயலாளரும், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் டி.எம்.அரியப்பன் அவர்களையும், மாநில அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி துணைச் செயலாளரும், அரூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் திரு.சி.செல்லதுரை அவர்களையும், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளரும், பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் திரு.எவரெஸ்ட்.என். நரேஷ்குமார் அவர்களையும் அறிமுகப்படுத்த உள்ளார்கள். அதுசமயம் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. வாக்காளர் சேர்த்தல் நீக்கல் 2. வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2) மற்றும் வாக்குச்சாவடி குழு(BLC) சரிபார்த்தல்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.